//மிக மிக அவசரம்// தனி கவனம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.2751/ஆ5/2024, நாள். 31/07/2024

.....

பொருள் பள்ளிக் கல்வி – 2022–2023ம் ஆண்டு மான்யக் கோரிக்கை அறிவிப்பு – அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றத்தை மேம்படுத்தி, ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு மூன்று தமிழ்க்கூடல் நடத்திட – பள்ளி ஒன்றுக்கு ரூ.9000/– RTGS மூலமாக பள்ளிக்கு அனுப்பப்பட்டது – பயனீட்டு சான்று நேரில் சமர்பிக்க கோருதல் – சார்பு

பார்வை
1. 2022–2023ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சி துறை மானியக் கோரிக்கை, அறிவிப்பு எண். 01 நாள்.19.04.2022
2. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.015671/ எம்/இ1/2022, நாள். 03.07.2024
3. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 12.07.2024

.....

2022–2023ம் ஆண்டு மான்யக் கோரிக்கை அறிவிப்பின் படி அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றத்தை மேம்படுத்தி, ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு மூன்று தமிழ்க்கூடல் நடத்திடும் பொருட்டு பள்ளி ஒன்றுக்கு ரூ.9000/– வீதம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. பார்வை 2–ல் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் கடிதத்தில் அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றத்தை மேம்படுத்த பள்ளி ஒன்றுக்கு ரூ.9,000/– வீதம் வழங்கப்பட்டதற்கான பயனீட்டு சான்று கோரப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு ரூ. 9,000/– வீதம் பார்வை 3–ன் படி RTGS மூலமாக பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டது. எனவே, ரூ.9,000/– பெறப்பட்டமைக்கான பயனீட்டு சான்றினை 2 நகல்களில் இவ்வலுவலக ஆ5 பிரிவில் 02.08.2024–க்குள் தவறாமல் நேரில் சமர்பிக்குமாறு அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பயனீட்டு சான்று

31/07/24 31/7/24
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்

பெறுநர் –

தலைமையாசிரியர்கள்,

அரசு / நகரவை / ஆதிதிராவிட நல உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,

வேலூர் மாவட்டம்.

நகல் –

சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

# வேலூர் மாவட்டம்
## தமிழ் மன்றங்கள் மேம்படுத்தி தமிழ்கூடல் நிகழ்ச்சி – 2023–2024
## பயன்பாட்டுச் சான்றிதழ்

2022–2023ஆம் ஆண்டு மான்ய கோரிக்கை அறிவிப்பின்படி, அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றங்களை மேம்படுத்தி ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு மூன்று தமிழ்க்கூடல் நடத்திட 2023 – 2024 ஆம் ஆண்டிற்கு அரசாணை (ப) எண்.10, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ.1–1)த்துறை நாள். 18.01.2024–ன்படி, அதற்கான செலவினங்களை மேற்கொள்ள தொடர் செலவினமாக பள்ளி ஒன்றுக்கு ரூ. 9,000/– (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்) வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.2751/ஆ5/12.07.2024–ன் படி பள்ளிகளின் வங்கி கணக்கில் மின்னனு பரிவர்த்தனை (RTGS) மூலம் வரப்பெற்றது.

கீழ்காணும் படி வங்கி கணக்கில் வரப்பெற்ற தொகை ரூ.9,000/– (ரூபாய் ஒன்பது ஆயிரம் மட்டும்) அனைத்தும் முழுமையாக பயன்படுத்தப்பட்டது என சான்றளிக்கப்படுகிறது.

| வ. எண். | பள்ளியின் பெயர் | வங்கி கணக்கு எண் | வங்கி IFSC குறியீடு எண் | வங்கி கணக்கில் பணம் வரப்பெற்ற நாள் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |

தலைமையாசிரியரின் கையொப்பம்

முத்திரையுடன்